510

BUDDHA



புத்தர்

ஆசிரியர்:

எஸ். காந்திராஜன்.

BY

GANDHIRAJAN

...JAN.

510.
2-54

Q4
N54.
77948.

பண்டித நேரு இலங்கை பிரதமர் சர் ஜான் கோத்தலவாலாவுக்கு ராஷ்டிரபதி பவனில் அளித்த விருந்தில் பேசியதாவது:—

இன்று இந்த உலகில் பகவான் புத்தருடைய செய்தியை அறிவதும் அதன்படி நடக்க முயற்சிப்பதைத் தவிரவும், மிக அவசியமானது வேறொன்றுமில்லை.

அட்டை அச்சிடப்பட்டது:
காந்தி பிரிண்டர்ஸ், விருதுநகர்.

புத்தர்

★

ஆசிரியர்:

எஸ். காந்திராஜன்.

★

காந்தி கார்டன்,

காலேஜ் நகர், : : விருதுநகர்.

வெளியீடு — 2.
முதற்பதிப்பு
மே — 1954.

77948

ஆசிரியரின்
இதர நூல்:
"உலகஞானி புத்தர்"
விலை அணா 2.

N. B:- யோகாசன சம்பந்தமான சந்தேகங்களை, காலேஜ் நகரில் உள்ள எமது காந்தி கார்டனில் (GANDHI GARDEN) காலை 6-30 to 9 மணி வரையும், மாலை 5 to 7 மணி வரையும் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் அல்லது எழுதிக் கேட்கலாம்.

என்னுரை.

உலகப் பிரஜைகளே,

உலக ஞானி புத்த பெருமான் பிறந்த நாளாகிய இப்புனித நாளில் புத்த பகவானின் வாழ்க்கைச் சுருக்கத்தை இக்கட்டுரை மூலமாக உலகமக்களுக்கு காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

இக்கட்டுரை புத்த ஜயந்தியன்று புத்த பகவானின் வாழ்க்கை வரலாற்றை பாரத மக்களுக்கு நினைவுகூறும் வகையில் அகில இந்திய ரேடியோவில் பேச அனுமதி கோரினதில் அவர்கள் இக்கட்டுரையை பொருத்தம், தகுதியில்லை என்று அனுமதி மறுத்து விட்டார்கள். ஆதலால் இக்கட்டுரையை அப்படியே புஸ்தகமாகவெளியிட்டு, புத்த பெருமானின் பெருமையை உலகமெல்லாம் பரவச்செய்யும் நோக்குடன் அன்பளிப்பாக சமர்ப்பிக்கிறேன். இந்தியாவில் பிறந்த மகான்; இந்தியாவின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டிய மகான்; தற்போது இந்திய

சர்க்காரின் சின்னமாகிய அறநெறி மகான்; உலகில் 50 கோடி மக்களால் போற்றி பின்பற்றும் மகான்; 2500 ஆண்டுகளுக்கு முன்பே புரட்சிகரமான உபதேசத்தால் வாழ்க்கை அறநெறியை உபதேசித்த மகான் மாபெரும் ஞானி புத்த பெருமானின் வாழ்க்கைச் சரித்திரத்தை ரேடியோவில் பேச தகுதியில்லை என்று சொல்லிவிட்டு, மனிதனின் மதியை மறைமகமாக அடிமைப்படுத்தும் புராண இதிகாசங்களுக்கு அகில இந்திய ரேடியோவில் முதலிடம் கொடுக்கப்படுகிறது. அதாவது தேவர்கள், கடலைக் கடைந்து அமுதமாக்கி புசிப்பதாகவும், பூமியை பாயாகச்சுருட்டி சமுத்திரத்துக்குள் புகுந்து மறைவதாகவும் கதைகளாகிய புராணங்களாகும். புத்தரின் பெருமை இந்தியாவில் மறைந்ததற்கு முக்கிய காரணம் இம்மாதிரியான அறிவுக்கெட்டாத புராணங்களும் ஒன்ருகும். அத்துடன் எதிர்ப்பு சக்திகள் பலரூபமாக தோன்றி மறையச் செய்ததும், அதில் ஒன்றுமாகிய அகில இந்திய ரேடியோ ஒன்ருகும். புத்தர் காலம் இன்றைக்கு

2498 ஆகும். இப்போதே மறைமுகமாக எதிர்ப்பு இருக்கிறதென்றால் புத்தர் தன் காலத்தில் எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்து தன் அனுபவ அன்பின் அறிவால் புரட்சிகரமான உபதேசத்தால் தன் எதிர்ப்புகளை எப்படி சமாளித்திருப்பார் என்று சிந்திக்கும்போது நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது. புத்தருடைய வெற்றிக்கு அவருடைய ஒழுக்கமான நடத்தையும், அறநெறி உபதேசமும் ஆகும். புத்தருடைய காலம் மறுமலர்ச்சியடைந்து வருகிறது. இன்னும் 5000 ஆண்டுகள் வந்து போனாலும், இந்தியாவில் இன்னும் 4, 5 சர்க்கார் வந்து மறைந்தாலும் புத்த பெருமானின் பெருமையும், அவருடைய ஞான உபதேசமும் என்றென்றும் உலகம் உள்ளளவும் பிரகாசிக்கும் என்று பெருமையுடன் கூற விரும்புகிறேன். புத்த பெருமான் பிறந்த நாளாகிய இந்நாளை புனிதமாக அவரவர் வாழ்க்கையில் உபதேசங்களை நினைவு கூர்ந்து அதன்படி நடக்க உறுதி கூறுவோமாக.

புத்தருடைய காலம் 2500வது ஆண்டு, வரும் 1956வது வருஷம் முடிவடையும். இப்போதே பர்மா சர்க்கார் ஆண்டு தொடக்க விழா ஆரம்பித்து, அது வகைக்கு 10 கோடி ரூபாய் செலவு செய்கிறது. ஆசிய நாடுகள் அனைத்தும் பெருமையுடன் கொண்டாடுகிறது.

அந்நாளாகிய இந்நாளை நாமும் பெருமையுடன் வாழ்த்துவோமாக.

புத்த பெருமான் சரணம்.

வீண் வாதம், மூட நம்பிக்கை, உண்மையை மூடிவைத்தல், சகிப்பின்மை, சினம், கட்டாய மத மாற்றம், துறந்தவர்க்குள் ஜாதி வேறுபாடு, ஆண்களும் பெண்களும் நெருங்கி உறவாடல், தனக்கென வாழ்தல் என்பவற்றை அறவே ஒழித்தல் வேண்டும்.

— புத்தர்.

V. N. M. A. ராஜேந்திரனின் புத்த பெருமானைப் பற்றிய கருத்து :-

சாக்கிய ஞானி (புத்தர்) மனிதருள் மனிதரே யாவர். அவர் ஒருபோதும் ஓர் இடத்திலிருந்து புதியதாக ஒன்றைக்கூற வந்தேனென்று சொல்லிக் கொள்ள வில்லை. தம்மைத் தாமே துயரத்திலும், துன்பத்திலும் எப்படி விடுவித்துக் கொண்டாரோ அப்படியே மற்றவர்களை யும் செய்யலாமென போதித்தாரே தவிர மற்றெதுவும் தம்மால் சாதிக்கமுடியு மென்று சொல்லவில்லை. புத்தருடைய அருள்நெறி தர்மபோதனைகளை இதுவரை யும், இனிமேலும் யாரும் சொல்லாத சொல்லமுடியாத உயரிய சத்போதனை களை அவருக்குப் பின்னுல்வந்த சில மதத் தலைவர்கள் எடுத்துக்கொண்டும், அவற் றில் சில மாறுதல்கள் செய்தும் தம்மைப் பிரபல்யப்படுத்திக் கொண்டனர். அவர் களுடைய திறமையை என்னவென்று புகழ்வது! அதோடுமட்டும்விட்டார்களா? அவரை தாம் நினைத்தபடி எழுதுவதோடு

அல்லாமல் அவதார புருஷர்களோடு சேர்த்தும், இந்து மதத்தின் ஒரு பிரிவு என்றும் எழுதிவைத்தார்கள். புத்தம் ஒரு சமயமும் அல்ல. அஞ்ஞான உலகத்தை உய்விக்க வல்ல ஒரு தருமமேயாகும். இதை எல்லோரும் உணர வேண்டும். அந்த தர்மத்தையே மதம் என்ற பெயரைக்கொடுத்து அதில் பல பாகுபாடுகள் செய்து அவரவர்கள் வசதிக்கு ஏற்றவாறு மாற்றி, அதன் அடிப்படையை மாற்றி நாசம் செய்தார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. மேலும் இந்த தர்மபோதனைகள் பரவுமானால் தங்கள் தொழிலுக்கு குந்தகம் விளையும் என நினைத்தவர்கள் புத்த தர்மம் பிறந்த நாட்டிலேயே அது தழைக்கவொட்டாமல் தடுத்தார்கள். கருணை நிறைந்த அசோக சக்கரவர்த்தியால் அது பிறநாடுகளில் பரவிற்று.

கருணைக் கடல் புத்தர், ஆரம்பமும் முடிவுமற்ற சார்பியக்கத்திற்கு அதிகாரியும், எவ்வித சார்பு ஆத்மாவும் கிடையாதென்றார். இரத்தபலி, மந்திரம் முதலியவைகளை வெறுத்து அதனால் மனிதனை

காப்பாற்றக் கூடிய சக்தி எந்த தேவருக்கும் இல்லை என்றார். உயிர்வதை, கோபம், மதுபானம், பிடிவாதம், மதத் துவேஷம், வஞ்சகம், பொறாமை, அவமதித்தல், கெடுநினைவையும் அறவே விட்டொழிக்க வேண்டுமென்றார். ததாதகர் (புத்தர்) அமைதிக்கும், ஞானத்திற்கும், நிர்வாணத்திற்கும் (போதிநிலை) நடத்திச் செல்கிற மத்தியம பிரதிபாதா என்ற மத்திய மார்க்கத்தையே கண்டுபிடித்தார் அதாவது உண்மையாக அன்னியரை மகிழ்ச்சியடையச் செய்வதுதான் நிர்வாணமாகும். விக்கிரக வழிபாடு, பிரார்த்தனை, பூஜைகள் முதலியன சத்தருமத்திற்கு புறம்பானவை. கடின தவம், உபவாசம் முதலியவைகளால் பரிசுத்தமாக முடியாது என்றார் சாக்கிய ஞானி. புத்த தர்மத்திற்கே துக்க நிவாரண மார்க்கம் என்று கூறலாம். தர்மசாரதி, காம, வெகுளி, மயக்கமென்னும் பகைவரை வெற்றி கொண்டவனும், வேட்கையாலேற்படும் ஐம்புலப் பற்றுக்களாகிய 'நான்' என்னும் அரணைத் தகர்த்து, மனத்தை யடக்கியாள்பவனே சரியான வெற்றி வீரனும்,

தனியாட்சிக்குரிய ஆண்டகையுமாவான். இதுபற்றி விபரங்கள் பின்பு விரிவாக வெளியிடலாம் என்று இருக்கிறேன். இந்த உயரிய சத்தருமத்தை உலகமெல்லாம் பரவச்செய்தல் வேண்டும். இந்த தர்மத்தை நிலையோங்க பாடுபடும் அன்பர் காந்திராஜனுக்கு மென்மேலும் ஊக்கம் உண்டாக வேண்டும். அன்னுருக்கு எனது உள்ளங்கனிந்த நன்றி.

இப்படிக்கு,

V. N. M. A. ராஜேந்திரன்.

உலகில் அதர்மம் ஓங்குங்காலங்களில் எல்லாம், தர்மத்தைக் காக்க அவ்வப்போது அவதரிக்கிறேன்.

— கீதை.

நீங்கள் குழந்தை உள்ளம் உடையவர்களாக இல்லாவிட்டால் தேவனுடைய வீட்டிற்குள் புகமாட்டீர்கள். உயர்ந்த தியாகந்தான் ஆத்மாவின் நலனுக்குக் காரணமாய் இருக்கிறது.

— ஏகநாதர்.

புத்த ஜயந்தி

புத்த பெருமானின் வாழ்க்கைச் சுருக்கம்.

அஞ்ஞான இருள் செறிந்த உலகிலே, ஞானஜோதி என உதிர்ப்பார் உத்தம ஞானியர். அன்னார் ஒரு காலத்திலே, ஒரு சமூகத்திலே, ஓர் மதத்திலே தோன்றினும், எல்லோருக்கும், எக்காலத்திலும், எந்நாட்டிற்கும் உரியவரே யாவார். பொதுவாக சிறப்பாக கூறப்படுவது அறக்கடலும், அருட்கடலும் ஆகிய புத்த பெருமானுக்கே பொருத்தமாம்.

சரித்திரச் சான்ருக இன்றைக்கு, சற்றேறக்குறைய, இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்,

இந்த பரத கண்டத்திலே உள்ள, உத்தரகோசல தேசத்தில், கங்கை நதியின் கிளைகளில் ஒன்ருகிய கொகாரு நதிக்கரையில் உள்ள கபிலவஸ்து என்னும் நகரை சுத்தோதனன் என்று பெயர்பெற்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய முன்னேர்கள் சாக விருக்ஷங்கள் அதாவது (தேக்கு மரங்கள்) அடர்ந்த இடங்களில் வாழ்ந்தமையால் அவர்களுக்கு சாக்கியர் என்றும், கோதமர் என்பவரது மரபில் உதித்தமை பற்றி, கௌதமர் என்றும் சொல்லப்படுவர். அரசன் சுத்தோதனன், கோலிய தேசத்து அரசன் அஞ்சனன் மகளிர்களாகிய மாயாதேவி, பிரஜாபதிகௌதமியையும் மணம் செய்துகொண்டான். வெகுகாலம் பிள்ளைப் பேறுயில்லாமல் இருந்தது. பின், மாயாதேவி

கருவுற்று, நகரைபடுத்த உலும்பினி என்னுமிடத்தில் கி. மு. 563ம் ஆண்டில் வைசாக் பௌர்ணமி என்னும் நிறைமதி நாளில் ஓர் ஆண் மகவை ஈன்ருள். அக்குழந்தைக்கு ஐந்தாம் நாள் சித்தார்த்தர் என பெயரிட்டார்கள். ஏழாம் நாள் தாயாகிய மாயாதேவி இறந்துவிடவே, தன் சிற்றன்னை பிரஜாபதிகௌதமியால் சித்தார்த்தர் இனிது வளர்க்கப்பட்டார். ஐந்து வருடங்கள் கழித்து, சகல கலைகளிலும் வல்லவரான சர்வமித்திரரை குருவாகக்கொண்டு அரசருக்குரிய சகல கலைகளையும் பயின்று, தன் 16ம் பிராயத்தை அடைந்தார். சித்தார்த்தரின் கருணையுள்ளம், நுன்னறிவு முதலியவைகளை கவனிக்கும் பொழுது, துறவியாகப் போய்விடலாம் என்று சர்வமித்திரர் மூலம் அறிந்தான்

அரசன். சுத்தோதனன் கவலையில் ஆழ்ந்து, தன் மந்திரிமார்களுடன் கலந்து, ஆலோசனைப்படி தன் மைந்தன் சித்தார்த்தருக்கு பட்டாபிஷேகம் செய்வித்தார். இவ் விழாவானது ஏழு நாட்கள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அரசன் உத்திரவுப்படி ஏழாம் நாள் பரிசு விழாவிலே, அரச மைந்தர்களும், இளவரசிகளும் கலந்துகொண்டார்கள். இளவரசரால் பரிசுகள் வழங்கப்பட்டன. கடைசியாக கோலி நாட்டு அரசன் மகள் யசோதரைக்கு கொடுக்கப் பட்ட பட்டாடையை, அவள் வாங்காது நாணி நின்றாள். அதுகண்டு இளவரசர் தன்மீதுள்ள மணிமாலையை பரிசாகக் கொடுத்தார். இதுவே அவர்களது அன்பாகி, திருமணம் விமரிசையாக நடந்தேறியது.

சித்தார்த்தரையும், யசோதரை யையும், முப்பருவங்களுக்குரிய மூன்று சித்திரை மாளிகைகள் அமைந்த அணி நகரில், வெளி உலக இன்ப துன்பங்கள் எதுவும் அறியாதவாறு இல்லற இன்பத்தில் இனிது வாழ வகை செய்திருந்தபடியால், அவ் வேற்பாட்டின்படி சித்தார்த்தர் அணி நகரில் இனிது வாழ்ந்து வந்தார். இடையிடையே உயிரினங் களின் தோற்றத்தையும், தோன் றிய பொருள்கள் அழிவைப் பற்றி யும் அடிக்கடி தனது ஆசிரியர்களி டம் கேட்டுத் துலாவி, சரியான விடை காணாது தனித்து சிந்தனை யில் ஆழ்ந்துவிடுவார். இவ்விதம் பன்னிரண்டு ஆண்டுகள் சென்றன.

பதின்மூன்றாவது ஆண்டு தொடக் கத்தில், தன் தந்தையைக் காண,

அவரிநகரிலிருந்து தேரூர்ந்து செல் லுகையில், ஓர் வீதியின் ஓரத்தில் நரை திரை முதிர்ந்த ஓர் வயோதிக ரைக் கண்டார். உடனே தேரை நிறுத்தி, சாரதியிடம் இதன் கார ணம் யாது? எல்லோருக்கும் இந் நிலே வருமா? என்று கேட்டார். ஆம் என்று பதில் கூறினன். பின் சிறிது தூரம் சென்றவுடன், ஓர் நோயாளியையும், அவன் படும் துன் பத்தையும் கண்டார். கடைசியாக சிலர் பாடையில் ஒருவனே தூக்கிச் செல்வதைக் கண்டு, தேரை நிறுத்தி கீழே இறங்கி, ஏன் — இவனுக்கு என்ன நேர்ந்தது என்று அவர்களேக் கேட்டார். அவர்கள் இவன் இறந் துவிட்டான் என்று பதில் சொன் ஞர்கள். இறந்துவிட்டான் என்ருல் என்ன? என்று கேட்டார். ஐம்பு லன்களும் ஓய்ந்து விட்டபடியால்,

காணுதல், பேசுதல், சுவைத்தல் முதலியனசெயலற்று, பிணமானுன். பின் சுடுகாட்டில் காக்கையும், கழுகுகளும் தின்று பாழாகப் போய் விடும் என்ருர்கள். இந்நிலை இவருக்கு மட்டுமா அல்லது எல்லோருக்கும் ஏற்படுமா என்று கேட்டார். அரசே! மக்களாயினும் சரி, வரியவராயினும் சரி, வேந்தராயினும் சரி எல்லோரும் இறந்து அழியப்படுவார்கள் என்று சொன்ஞர்கள். இதுகேட்டு அரசன் தனக்கும், இது தான் முடிவு என்று உணர்ந்தவராய், திரும்ப அணிநகர் வந்துசேர்ந்தார். உடனே நாட்டில் உள்ள ஆராய்ச்சியாளர்களே வரவழைத்து, அவர்களுடன் மக்களின் துன்பத்தைப்போக்க வழி உண்டா? என்று அளவளாவி, ஆராய்ந்தார். எவரும் சரியானவிடை கூறவில்லே. இப்படி

இருந்துவரும் போது, இவருக்கு ஓர் ஆண்மகன் பிறந்தான். அவனுக்கு "இராகுலன்" என பெயரிட்டு, மக்கள் மகிழ்ச்சி கொண்டாட்டம் கொண்டாடினார்கள்.

ஓர் நாள் நள்ளிரவில் விழித்துக் கொண்ட சித்தார்த்தர், துன்பத்தின் உண்மை நிலையறிய வேண்டுமாயின், இவ்வரசவாழ்க்கை தகுதியற்றதாக வேண்டும், துறவறம் பூண்டே தேடியுணர வேண்டும் என்று முடிவு செய்து, தன் இன்பத்திற்குரிய மனைவியையும், அன்பிற்குரிய மைந்தனையும் விட்டுப் பிரிந்து, குதிரை லாயம் சென்று, பாகன் சன்னுவைக் கூட்டிக்கொண்டு, தன் பட்டத்துக் குதிரைமீது அமர்ந்து, நகருக்கு வெளியில் சென்றார். காலையில் ஓர் நதியையடைந்து சன்னுவிடம் தன்

ஆடை, ஆபரணங்களைக் கொடுத்து வாளால் தன் தலைமுடியையும் வெட்டி, துன்பத்தின் வெற்றியைக் கண்டு மீள்வேன் என்று தன் தந்தையிடம் தெரிவிக்கும்படி அனுப்பினார். அப்போது அவருக்கு வயது 29.

பின் அநேக நகரங்களுக்குச் சென்று, தெருத்தெருவாக பிச்சை எடுத்து, உண்டும், உறங்கியும், அக்காலத்திய தவ சந்நியாசிகளிடம் சேர்ந்து, போதனை, பயிற்சி, உடலொடுக்கம் செய்து, கஷ்டப்பட்டும், தான் தேடி அலையும் பொருள் கிடைக்கப்பெருமல் ஆறு ஆண்டுகள் அலைந்தார்.

கடைசியாக பிறருடைய உதவியின்றி தான் தானுய் போதி மரத்தடியில் அமர்ந்து, ஞான நிலை

யை அடையப் பெற்றார். அவர் கண்டு பிடித்த நடுத்தரமான நிலையாகிய, போதிநிலையை எவ்விதமான சுயநலக் கருத்தும் இல்லாமல் தன் முன்மாதிரியான நடத்தைகளினால் தன்னைத்தான் அர்ப்பணித்தார். போதிநிலையடைந்தமையால் அவர் "புத்தர்" என்று அழைக்கப் பட்டார்.

பின் முதலாவதாக காசிக்குச் செல்லும் வழியில், தவசிகள் ஐவரைச் சந்தித்து தன் முதல் பிரசங்கம் ஆகிய "தர்ம சக்கர பிரவர்த்தனம்" என்னும் அறவாழியை சித்தரித்தார். இதுகேட்டு ஐவரும் சிஷ்யர்கள் ஆனார்கள். முதன் முதலில் ஐவரைக் கொண்ட புத்தர், பின் இன்றைய உலகில் ஐம்பது கோடி

பௌத்தர்கள் உள்ள, மாபெரும் மதமாக தோன்றிவருகிறது.

இவ்வாறு புத்தர் தன் ஒழுக்க நெறியில் உயர்ந்த போதனைகளை நாடுதோறும் 45 ஆண்டுகள் அறநெறியை உபதேசம் செய்து வந்தார். கடைசியாக கி. மு. 483ல் அதாவது அவருடைய 80-வது வயதில், நேபாளத்திற்கு அருகாமையில் உள்ள குசிநகரத்தில் பரிநிர்வாணம் அடைந்தார்.

புத்த பெருமான் மனிதனாகவே பிறந்து, மனிதனாகவே வாழ்ந்து, மனிதனாகவே இறந்தார்.

புத்தரின் அறநெறிபோதனைகளை அக்காலத்திய அசோக சக்கரவர்த்தி நாடெங்கிலும் பரப்பினர். புத்தருடையகாலம் இன்றைக்கு 2498 ஆண்டுகள் ஆகும். அசோகன் காலத்தில் எழுப்பிய சின்னங்கள் தான், இன்றைய நம் பாரத தேச அரசாங்க சின்னமாக "தர்ம சக்கரம்" பொறிக்கப்பெற்று ஆட்சி நடைபெறுகிறது.

புத்தருடைய சில முக்கியமான உபதேசங்கள் :-

அன்பைக்கொடுத்து அறிவைப் பெறுதல். ஜீவ ஹிம்சை செய்யாதிருத்தல். ஒழுக்கமாகவாழ்ந்து, உண்மையேபேசி, பிறருக்கு நன்மையே செய்து, அறநெறியில் வாழவேண்டும் என்பனவாம்.

புத்தபெருமான் பிறந்த இந்த புண்ணிய தினமான வைசாக விசாக நாளை பெருநாளாக போற்றி போதி வேந்தனை நினைத்து, போதனையைப் பின்பற்றி பயன் அடைவோமாக.

புத்தம் சரணம் கச்சாமி!

தம்மம் சரணம் கச்சாமி!

சங்கம் சரணம் கச்சாமி!

மெதுவாகப் பேசு; அது உன் இரகசியங்களைப் பாதுகாக்கும். தர்மம் செய்; அது உன் செல்வத்தைப் பாதுகாக்கும். நல்லெண்ணத் தோடிரு; அது உன் நடத்தையைப் பாதுகாக்கும். உண்மை சொல்; அது உன் வார்த்தைகளைப் பாதுகாக்கும். கலந்தாலோசனை செய்; அது உன் சிந்தனைகளைப் பாதுகாக்கும்.

— நபிகள் நாயகம்.

பொன் மொழிகள்.

சர்வோதய சம்மேளன மகாநாட்டில் எனது நண்பர் இந்திய உப ஜனாதிபதி டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசியதாவது :-

ஜாதிபேதம் பாராட்டுவது அதர்மம்.

எந்த மதமும் கீழ் ஜாதி, மேல் ஜாதி என்று பாகுபாடு செய்ய வில்லை. ஒவ்வொருவரும் ஆண்டவனின் மக்கள். அவர்கள் ஆண்டவனை அடைவதற்கு இயலுமென்பதே ஹிந்து மதத்தின் போதனை.

ஒவ்வொருவரும் புத்தராக முடியுமென்பதே புத்தரின் உபதேசம். ஆண்டவன் உன் உள்ளத்திலேயே இருக்கிறார் என்கிறது கிறிஸ்துவ மதம்.

ஆண்டவன் உன் அண்டையிலேயே இருக்கிறார் என்கிறது இஸ்லாம் மதம். ஆகவே சமூகத்தில் பாகுபாடு செய்யும் எந்த பழக்க வழக்கமும் மதத்திற்கும், தர்மத்திற்கும் விரோதமானது.

ஐக்கிய நாட்டு பொதுசபைத் தலைவர் திரு. விஜயலட்சுமி பண்டிட் இலங்கையில் பேசியதாவது:— 20—3—'54.

புத்த பகவான் போதனையின் மறுமலர்ச்சி, உலக சமாதானத்திற்கு மட்டுமின்றி நவீன நாகரீகம் உயிர் வாழ்வதற்கும் அத்தியாவசியமானவைகளாகும்.

22948

இந்திய உப ஜனாதிபதி டாக்டர் S. ராதாகிருஷ்ணன் புத்தர் நிர்வாணம் பெற்ற 2500வது ஆண்டு விழா துடக்கத்துக்கு ஹிரோஷிமாவுக்கு அனுப்பிய செய்தி :—

புத்தரது புனித உபதேசத்தை யேற்றுக்கொள்வதன் மூலமே உலகு உய்யும் என்பது உறுதி. புத்தரது செய்தியை அகில உலகிலும் பரப்பி பிரக்ஞையும் கருணையும் உண்டாக்குக.

BUDDHA

*

AUTHOR :

S. GANDHIRAJAN.

*

GANDHI GARDEN,
College Nagar, :: VIRUDHUNAGAR.

Publication No. 2.
May—1954.

Publication No. 1.

BUDDHA, THE SAGE

Author : S. GANDHIRAJAN

Price As. 2.

If any doubt about "Yogasanam" please write, to S. Gandhirajan, Gandhi Garden, Virudhunagar to clear it.

PREFACE.

Fellow citizens of the World!

I dedicate the contents of this booklet to the fellow citizens of the world on this auspicious day which commemorates the birth day of Lord Buddha.

The passage of this booklet was utterly rejected by the authorities of the *A. I. R., as quite unfit for broadcasting, while it was actually intended to remember Lord Buddha by all the bretheren of India through a broadcast. Hence with a view to do my service of spreading the glories of Lord Buddha

* *All India Radio, Trichinopoly.*

throughout the sphere, I dedicate this booklet to one and all of the world.

It is surprising to note the action of the authority of the A. I. R., in regard to a broadcast about a philosopher, who born in India, who lighted the fame of India in the rest of the world and whose symbol is affirmed by our National Government as unfit a broadcast.

But it is curious, ludicurous and at the same time regrettable in as much as they consider fit such stories which are highly credible, which presup-

pose our belief and which call for our reason.

One of the conspicuous factor which caused the disappearance of the fame and glory of the Great Buddha and his Religion in India in the past is due to such unbelievable stories. Persecution, intolerance and anti-Buddhist propagandas — all these largely and lavishly contributed to such an inevitable result of wholesale disappearance.

Even if there is opposition and persecution today, then one can fairly and vividly imagine for himself what a lot of

difficulties, disabilities and opposition had He to face in his own days, but which He boldly and successfully faced and managed by His revolutionary but easily adoptable and universally acceptable doctrines. The secret of Buddha's success lies in his own pious conduct, unsophisticated life, noble and original character and divine gospels.

Today we witness the blossoming and renaissance of the glorious and memorable age of great Buddha. In this connection I want to say, rather boast with infinite pride that the fame and name of Buddha will be

remembered for ever and in fact it is remembered by all irrespective of the quick march of time and change of Governments. Therefore, I appeal to one and all of our countrymen to fellow the ideals and path of Lord Buddha as shown and taught by Him.

The 25th century of the age of Lord Buddha ends in 1956. In order to celebrate it, the Government of Burma has sanctioned 1 crore of rupees and has taken steps in this

connection now itself. Also every one of the countries in Asia celebrates the above ceremony. Therefore let us also celebrate the same ceremony to-day with great pomp and splendour.

S. Gandhirajan.

Useless debate, blind belief, lidding up the truth, anger, compulsory conversion of religion, creating caste and creed differences on those who have sacrificed all, very closer and unnatural movements of man and woman, self-leading life, must be completely removed from one's life.

(BUDDHA)

The views of Mr. V. N. M. A. Rajendran about Buddha, the Seer :-

The sage of the Sakyas (Buddha) is indeed a Man of his own species. He never said that he had come to preach a new idea from a new world. He preached that others can be released from the fetters of sorrow and misery in the same manner as he did free himself from the shackles of sorrow and misery but never uttered that he could perform other things apart from that. Some religious

leaders, who came after Buddha after taking and effecting certain modifications in the divine, noble, till now unuttered and unutterable high teachings of Buddha, made themselves famous and prominent. How are we to praise the ability of such religious leaders. They did not even stop with that but had written about Buddha as they pleased and placed him among other prophets and wrote as though his doctrines were a sect of Hinduism. The great doctrines of Buddha are not a religion at all but are the noble agents to release the world of ignorant masses. This should be felt by all of us.

Such noble teachings of Buddha had been given the name 'Religion' and in that several divisions had been made and changes had been introduced to suit the needs of their own and had been destroyed by the changes that took place in the fundamental principles of Buddha. This sort of deed is indeed lamentable. They prevented the growth of the noble preachings of Buddha even in the land of its own birth thinking that the spread of the noble preachings of Buddha would cause a great havoc to their professions. The noble and valuable preachings of the 'Enlightened' (Buddha)

spread in other countries due to the efforts taken by Asoka, the Great.

He abhorred gory sacrifices, incantations and such other deeds and said that even divinity of all kind has got no power of saving mankind by the acceptance of the abhorred deeds. He said that massacre, anger, drinking practices, obstinacy, religious discomfort, hatred, dishonouring nature and ill-thought must completely be avoided, Sakyamuni (Buddha) found out the EIGHTFOLD path or the MIDDLE path leading to tranquility, wisdom, and Nirvana. True Dharma does

not require idol worship, prayer, and ecclesiastical religious ceremonies. The sage of the Sakyas insisted that severe tapas and fasts cannot purify one's soul.

One who has got the power of suppressing the enemies of amorous passion, anger, delusion and the power of devastating the fortress of the 'Self' evolving out of the desire for Five Senses and the power of controlling the mind can be regarded the true victorious hero having an in dependent rule. This noble preachings of Buddha must be made to spread throughout the world.

I pray God for further inducement of my friend, Gandhirajan, who is ever toiling for the spread of noble preachings of Buddha and I am really indeleted to thank him for the same.

V. N. M. A. Rajendran.

Whenever injustice and uncharity spring up in the world, I take birth to safeguard justice and uproot evils. (GITA)

Supreme sacrifice is the way for the betterment of the Soul. You cannot enter the hortals of God unless you are as innocent and brank as a child. (JESUS CHRIST)

Speak in low voice; it will preserve your secrets. Do charity; it will preserve your wealth. Always remain with goodwill; it will preserve your manners and customs. Utter always truth; it will preserve your words. Do consult with others; it will purify your imaginary powers. (MOHAMAD NABI)

The life sketch of LORD BUDDHA.

Buddha was born in the world amidst darkness, barbariam, the tyranical rule of the caste hindrus and the blind religious faith. He is loved and liked by all because he is common to all.

King Suddhothana ruled over Kabilavasthu on the bank of the river Kokana, which is one of the branches of the river Gangis. His ancestores lived amidst Teak trees (Sakavirutcham) and therefore they were called Sakkiers. They were

otherwise known as Kouthamar as their ancestors belonged to the Kouthama dynasty. The king Suddhothana married Maya Devi, Pirajapathy Gowthami, daughters of Anchanan, king of Kolia Desa. After a lapse of several years Mayadevi conceived and gave birth to a male child on one full Moon day during the Vaisak Visak, in Ulumbini near the capital in B. C. 563.

The child was named as Siddhartha on the fifth day after birth. Queen Mayadevi died on the seventh day after child birth. So Siddhartha was brought up by his step mother

Prajapathy Gowthami. After five years, Siddhartha was given sufficient schooling and was taught all arts necessary for a Prince. Sarvamitrar master of all arts was his teacher the. Siddhartha attained the 16th year. Siddhartha was extremely sympathetic, soft natured and exceptionally intelligent. The kind Suddhothana learnt from Sarvamitrar that Siddhartha might possibly choose to become Saint.

The king got much worried, consulted his ministers and enthroned Siddhartha as king for his kingdom. The cornation took place and was celebrated

since seven days with all pomp. The seventh day was the prize giving day in which Princes and Princesses took part. A silk saree was presented to princess Yasodara, daughter of the king of Kolia by Siddhartha and she was hesitating to accept it simply because she felt shy. So Prince Siddhartha presented his Manimalai to the Princess Yasodara. Thus their love developed and their marriage was celebrated sooner.

Prince Siddhartha was given all facilitties to live a luxurious life free from worldly cares and worries. Three palaces were constructed each of which

served the purpose in different seasons. Thus Siddhartha lived a happy life with his newly married bride. He began to think over the origin of human beings and animals and death ensue to all. He discussed with his teachers very often about this. None could convice him. He concentrated himself days and nights. Thus twelve years passed.

When the thirteenth year commenced he went to see his father in a Chariot(car) along the streets of the city. He happened to see one old man going on the side of a street. So he asked to stop the Chariot and

wanted to know that every body like him should suffer in oldage. The driver of the Chariot replied in the affirmative. When he passed a few yards he chanced to see one sickly man in distress. When he went ahead he could see a dead body went in procession. He got down from the Chariot and enquired what had happended to him. He learnt from them that he was dead. He could not understand the significance of death. The five senses of this man stopped their functioning and so he

was declared to have died. This was the reply given to him by the people. They also said that his deadbody would be eaten away by crows and eagles in the burial ground. Siddhartha came to know that death is common to all.

When he returned to the capital he discussed with masters of all religious and decided to find out a relief and remedy from all worldly destress and killing cares and worries. None brought forth any useful clue. In the meantime a son was

born to Siddhartha. He was named as Rakulan and this joyous occassion was celebrated with all pomp.

One midnight Siddhartha got up. He decided to find out the source of destress. So he thought of giving up his kingship and kingdom. He thought that the saintly life is the best of all. So he left his beloved wife and much loved son and went on horse back with his horse driver Sanna towards the outside of the city. He sent back his horse driver Sanna with his dress and ornaments with instructions that he would return home only after finding

relief and remedy from the worldly destress. He was as only 29 when he left the palace. He visited many a city and begged streets after streets. He made friends with saints of those days and practised how he could control the five senses. He learnt the truth of all popular religions. He felt a prey to fast. Inspite all these he could not find what he expected. Thus six years have since elapsed. Atlength without seeking anybody's help of his own accord he sat under the shades of Bothi Virutcham and found out the truth the reality and origin of all miseries. Because he attained Botham under the

Bothi Virutcham he was called BUDDHA.

His finest visit was to Beneres. He met five saints on the way. He addressed meeting and impressed the public that his speeches were genuine and true. Five became his disciples. Fifty crors of people in this world have become the follower of Buddha. Buddha was preaching his religious doctrines for 45 years. Buddha died in his 80th years i. e. in 483 B. C. in the city of Kusi near Nepal. Buddha was born

a man, lived as a man and died as a man. Emperor Asoka sent Buddist preachers all over India and China and spread Buddhism all over India, China and Asian Countries. Buddha's period is before 2498 years. The symbols made up os., Asoka mainly the Asoka Chakram is the emblum of India Government.

Teachings of Buddha :-

1. To live others and thus to attain wisdom.

2. Not to kill animals and human beings.

3. To speak to truth, to do help to others and to live a life as Buddha preached.

Lord Buddha was born on the full moon day during the Tamil month Vaisak Visak and as such we would celebrate the day and follow his teachings.

Buddham Saranam Kachami !

Dharmam Saranam Kachami !

Sangam Saranam Kachami !

VIEWS OF
OUR LEADERS.

The following is the gist of the speech of our Vice President Dr. S. Radhakrishnan, on the day of the Sarvodhaya Conference. It is a great sin and foolish in the extreme to speak of any religious and caste discrimination or difference. No religion preaches of any sort of such discrimination or difference. All are the children of the ALMIGHTY, and hence all are born free and equal, subject only to Him. Every

religion, preaches this and only this. For example, the Hindu Religion, the ancient of all, tells us that each and every-one could well secure the favour and blessings of the AL-MIGHTY by true worship and real faith. Christianity, Islam, Jainism and also Buddhism—all these religious preach only this profound and universal truth, though in various terms. Therefore we will not be far wrong if we say that it is wholly anti-religious and sinuous to

think or speak of any sort of religous discrimination or racial difference or inferiority complex.

Mrs. Vijayalakshmi Pandit, present President of the U. N. O., spoke on 20—3—'54 in Ceylon that the renaissance or the revival of the doctrines and teachings of the blessed seer Buddha is not only a primary means for worldly peace and security but also an essential condition and requisite for our existence, our civilization and culture.

Dr. S. Radhakrishnan, in his message to Hiroshima on the day of Buddha's MAHANIRVANA stated that it is his strong belief and implicit faith that the world can survive only if it adheres and adopts the gospels of Lord Buddha, and as such let us all spread the message as well as the lofty and laudable ideals of the Great Buddha and thereby diffuse faith, devotion, love and affection through the Universe.

77948

Printed at Gandhi Printers, Virudhnnagar.

Pandit Nehru, in the course of his address at the party given to Sir John Kotalawala, the Ceylon Premier, added that in the world to-day nothing was more necessary to understand and try to live up to the message of Bhagwan Buddha.

WRAPPER PRINTED AT
GANDHI PRINTERS,
VIRUDHUNAGAR.

6A
7-30